لِّيَعْلَمَ اَنْ قَدْ اَبْلَغُوْا رِسٰلٰتِ رَبِّهِمْ وَاَحَاطَ بِمَا لَدَيْهِمْ
وَاَحْصٰى كُلَّ شَیْءٍ عَدَدًا ﴿٢٨﴾ ع ٢ ٩ ١٢

سُوْرَةُ الْمُزَّمِّلِ مَكِّيَّةٌ وَّهِيَ عِشْرُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

يٰۤاَيُّهَا الْمُزَّمِّلُ ﴿١﴾ قُمِ الَّيْلَ اِلَّا قَلِيْلًا ﴿٢﴾ نِّصْفَهٗۤ اَوِ انْقُصْ
مِنْهُ قَلِيْلًا ﴿٣﴾ اَوْ زِدْ عَلَيْهِ وَرَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا ﴿٤﴾ اِنَّا
سَنُلْقِیْ عَلَيْكَ قَوْلًا ثَقِيْلًا ﴿٥﴾ اِنَّ نَاشِئَةَ الَّيْلِ هِیَ
اَشَدُّ وَطْاً وَّاَقْوَمُ قِيْلًا ﴿٦﴾ اِنَّ لَكَ فِی النَّهَارِ سَبْحًا
طَوِيْلًا ﴿٧﴾ وَاذْكُرِ اسْمَ رَبِّكَ وَتَبَتَّلْ اِلَيْهِ تَبْتِيْلًا ﴿٨﴾
رَبُّ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ فَاتَّخِذْهُ وَكِيْلًا ﴿٩﴾
وَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَاهْجُرْهُمْ هَجْرًا جَمِيْلًا ﴿١٠﴾ وَ
ذَرْنِیْ وَالْمُكَذِّبِيْنَ اُولِی النَّعْمَةِ وَمَهِّلْهُمْ قَلِيْلًا ﴿١١﴾ اِنَّ
لَدَيْنَاۤ اَنْكَالًا وَّجَحِيْمًا ﴿١٢﴾ وَّطَعَامًا ذَا غُصَّةٍ وَّعَذَابًا اَلِيْمًا ﴿١٣﴾ يَوْمَ
تَرْجُفُ الْاَرْضُ وَالْجِبَالُ وَكَانَتِ الْجِبَالُ كَثِيْبًا مَّهِيْلًا ﴿١٤﴾ اِنَّاۤ اَرْسَلْنَاۤ
اِلَيْكُمْ رَسُوْلًا ۙ شَاهِدًا عَلَيْكُمْ كَمَاۤ اَرْسَلْنَاۤ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا ﴿١٥﴾

28. (அத்தூதர்கள்) தங்கள் இரட்சகனின் தூதுச் செய்திகளை, திட்டமாகவே எடுத்துரைத்தார்கள் என்பதை, தான் அறிந்துகொள்வதற்காக. அவர்களிடமுள்ளவற்றை அவன் (தன் அறிவால்) சூழ்ந்தறிந்து கொண்டவனாக இருக்க, ஒவ்வொரு பொருளையும் எண்ணிக்கையால் பூரணமாகக் கணக்கிட்டும் வைத்துள்ளான்."

---

அத்தியாயம் : 73

## அல் முஜ்ஜம்மில் _ போர்வை போர்த்தியவர்

வசனங்கள் : 20 மக்கீ ருகூஉகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. போர்வை போர்த்திக்கொண்டிருப்பவரே!
2. இரவில் (தொழுவதற்காக) எழுவீராக! சொற்ப (நேர)ம் தவிர_
3. அதில் பாதி, (நேரத்தில் தொழுவீராக!) அல்லது அதிலிருந்து சொற்ப (நேர)த்தைக் குறைத்துக் கொள்வீராக!
4. அல்லது அதை விட(ச்சற்று நேரத்தை) அதிகப்படுத்திக்கொள்வீராக! (இரவுத்தொழுகையான) அதில் குர்ஆனை (நன்கு திருத்தமாக) நிறுத்தி, நிறுத்தியும்ஓதுவீராக!
5. நிச்சயமாக நாம் அடுத்து பளுவான வாக்கை உம்மீது போடுவோம் (வஹீயின்மூலம் அறிவிப்போம்).
6. நிச்சயமாக இரவில் (வணக்கத்தை நிறைவேற்ற) எழுவதானது_அதுவே (மனமும், நாவும்) ஒன்றிணைந்திருக்க மிக்க உறுதியானதும், மேலும் கூற்றால் மிக்க உறுதியானதுமாகும்.
7. நிச்சயமாக உமக்குப் பகலில் நீண்ட வேலை இருக்கின்றது.
8. மேலும், உமதிரட்சகனின் பெயரை நினைவு கூர்வீராக! (அவனுக்கே வணக்கத்தையும், பிரார்த்தனையையும் ஆக்கி) அவன்பால் முற்றிலும் ஆகிவிடுவீராக.
9. (அவனே) கிழக்கிற்கும், மேற்கிற்கும் இரட்சகன்; அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை. ஆகவே, அவனையே நீர் (உமது) பொறுப்பாளனாக எடுத்துக்கொள்வீராக.
10. அன்றியும், (நபியே!) அவர்கள் (உமக்கெதிராகச்) சொல்வதின்மீது நீர் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், அழகான வெறுப்பாக அவர்களை (அல்லாஹ்வுக்காக) நீர் வெறுத்துவிடுவீராக!
11. என்னையும், சுகத்தையுடையவர்களான பொய்ப்பிக்கக்கூடியவர்களையும் நீர் விட்டுவிடுவீராக! (நான் ஏற்படுத்திய தவணையை அவர்கள் அடையும் வரை) அவர்களுக்குச் சிறிது அவகாசமும் கொடுப்பீராக!
12. நிச்சயமாக நம்மிடத்தில் (அவர்களுக்காக) விலங்குகளும், நரகமும் இருக்கின்றன.
13. இன்னும், (அவர்களுக்குத் தொண்டையில்) விக்கிக்கொள்ளக்கூடிய உணவும், துன்புறுத்தும் வேதனையும் (இருக்கின்றன).
14. பூமியும், மலைகளும் ஆட்டம்கண்டு (அதிலிருப்போரை உலுக்கி), இன்னும், மலைகள் சிதறுண்ட மண் குவியல்களாகிவிடும் நாளில்_(அவர்களுக்கு நடந்தேறும் வேதனை உண்டு)
15. ஃபிர்அவ்னின்பால் நாம் ஒருதூதரை அனுப்பிவைத்தது போன்று, உங்கள் மீது சாட்சியாளராக ஒரு தூதரை உங்களிடம் நிச்சயமாக நாம் அனுப்பி வைத்தோம்.

فَعَصٰى فِرْعَوْنُ الرَّسُوْلَ فَاَخَذْنٰهُ اَخْذًا وَّبِيْلًا ﴿۱۶﴾
فَكَيْفَ تَتَّقُوْنَ اِنْ كَفَرْتُمْ يَوْمًا يَّجْعَلُ الْوِلْدَانَ
شِيْبَا ﴿۱۷﴾ السَّمَآءُ مُنْفَطِرٌۢ بِهٖ ؕ كَانَ وَعْدُهٗ مَفْعُوْلًا ﴿۱۸﴾ اِنَّ
هٰذِهٖ تَذْكِرَةٌ ۚ فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰى رَبِّهٖ سَبِيْلًا ﴿۱۹﴾ ع ۱ ۱۳
اِنَّ رَبَّكَ يَعْلَمُ اَنَّكَ تَقُوْمُ اَدْنٰى مِنْ ثُلُثَيِ الَّيْلِ وَ
نِصْفَهٗ وَثُلُثَهٗ وَطَآئِفَةٌ مِّنَ الَّذِيْنَ مَعَكَ ؕ وَاللّٰهُ
يُقَدِّرُ الَّيْلَ وَالنَّهَارَ ؕ عَلِمَ اَنْ لَّنْ تُحْصُوْهُ فَتَابَ
عَلَيْكُمْ فَاقْرَءُوْا مَا تَيَسَّرَ مِنَ الْقُرْاٰنِ ؕ عَلِمَ اَنْ
سَيَكُوْنُ مِنْكُمْ مَّرْضٰى ۙ وَاٰخَرُوْنَ يَضْرِبُوْنَ فِى الْاَرْضِ
يَبْتَغُوْنَ مِنْ فَضْلِ اللّٰهِ ۙ وَاٰخَرُوْنَ يُقَاتِلُوْنَ فِىْ
سَبِيْلِ اللّٰهِ ۖؗ فَاقْرَءُوْا مَا تَيَسَّرَ مِنْهُ ۙ وَاَقِيْمُوا الصَّلٰوةَ
وَاٰتُوا الزَّكٰوةَ وَاَقْرِضُوا اللّٰهَ قَرْضًا حَسَنًا ؕ وَمَا تُقَدِّمُوْا
لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ هُوَ خَيْرًا
وَّاَعْظَمَ اَجْرًا ؕ وَاسْتَغْفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ
رَّحِيْمٌ ﴿۲۰﴾ ع ۲ ۱۴

16. பின்னர், ஃபிர்அவ்ன் அத்தூதருக்கு மாறு செய்தான்; ஆகவே, கடினமான பிடியாக அவனை நாம் பிடித்துக்கொண்டோம்.

17. நீங்கள் நிராகரித்துவிட்டீர்களானால், குழந்தைகளை நரைத்த(கிழ)வர்களாக ஆக்கிவிடும் நாளில், (நம்முடைய பிடியிலிருந்துத் தப்பித்து உங்களை) நீங்கள் எவ்வாறு காத்துக்கொள்வீர்கள்?

18. அ(ந்நாளில் நிகழும் பெரும் அமளியான)தன் காரணமாக வானம்வெடித்துப் போய்விடும்; அவனுடைய வாக்கு(சந்தேகமின்றி)செயல்படுத்தப்பட்டதாகிவிடும்.

19. நிச்சயமாக இது, ஒரு உபதேசமாகும்; ஆகவே, எவர் நாடுகிறாரோ அவர் தன் இரட்சகனின் பால்(செல்லக்கூடிய)வழியை எடுத்துக்கொள்வார்.

20. (நபியே!) நிச்சயமாக நீரும், உம்மோடு இருப்போரில் ஒரு கூட்டத்தினரும், இரவில் மூன்றில் இருபாகங்களைவிட மிகக்குறைவாக, இன்னும் அதில் பாதியில், இன்னும் அதில் மூன்றில் ஒருபாக(நேர)த்தில் (இரவுத் தொழுகைக்காக) நிற்கிறீர்கள் என்பதை நிச்சயமாக உமதிரட்சகன் அறிவான்; இன்னும் இரவையும், பகலையும் அல்லாஹ்தான் நிர்ணயம் செய்து (அதன்நேரங்களை அளவாக அமைத்து)ள்ளான்; நீங்கள் அதனை சரிவரக் கணக்கிடவே முடியாதென்பதை அவன் அறிந்துள்ளான்; ஆகவே, உங்களை அவன் மன்னித்துவிட்டான்; எனவே, குர்ஆனிலிருந்து(உங்களுக்கு) இயன்றதை ஓதுங்கள்; (ஏனெனில்,) உங்களில் (இரவு வணக்கத்தை விட்டும் அனுமதி பெறும்) நோயாளிகளும், அல்லாஹ்வின் பேரருளைத்தேடியவர்களாக பூமியில் பிரயாணம் செய்யும் வேறு சிலரும், அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும்வேறு சிலரும் இருப்பார்கள் என்பதை அவன் அறிந்துள்ளான்; ஆகவே, அதிலிருந்து இயன்றதை ஓதுங்கள்; மேலும், தொழுகையை முறையாக நிறைவேற்றுங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்; அல்லாஹ்விற்கு அழகான கடனாக கடனும்கொடுங்கள்; மேலும், நன்மையிலிருந்து உங்களுக்காக எதை நீங்கள் முற்படுத்துகிறீர்களோ, அது அல்லாஹ்விடத்தில் மிகச்சிறந்ததாகவும், (நற்) கூலியில் மிக மகத்தானதாகவும் அதனை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்; அல்லாஹ்விடம் மன்னிப்பும் தேடுங்கள்; நிச்சயமாக, அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக்கிருபையுடையவன்.